**29.07.2022 ஆம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருட்கள்**
**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு மின்னணு முறையில் (E Tendering) ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு Bid document &Tender notice ஆகியவற்றை இனையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு Digital signature card தேவைப்படுவதால்,அவசர அவசியம் கருதி, M/S Rain Bow consultancy service, Marthandam நிறுவனம் மூலம் Digital signature card எடுக்கப்பட்ட வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.3000/- ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து திருமதிS.பிரம்மசக்தி, பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 812/2022/இ1

**தீர்மானம் எண். 299 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு கண்காணிப்பு வாகனம் (ஈப்பு) TN.75.K6526-ல் Cultch, Disc, & Yok & Teeth joint star ஆகியவற்றில் பழுது ஏற்பட்டு, வாகனம் சரியாக இயக்க இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, M/S.Akshaya Motors, Unnamalaikadai நிறுவனத்தில் வாகனம் பரிசோதனை செய்யப்பட்டு,பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.15,850/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.மேற்படி வாகனம் அலுவலகப் பணிகளுக்கு மிகவும் அத்தியாவசியமானதை கருத்தில் கொண்டு,M/S.Akshaya Motor, Unnamalaikadai நிறுவனம் மூலம் பழுது நீக்கப் பணிகளை ரூ.15,850/-மதிப்பீட்டில் மேற்கொள்ளவதற்கும்,அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 7057-1/2011/இ1

**தீர்மானம் எண். 300 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN.74.V3530-ல் முன் இடது புற கதவில் கண்ணாடி ஏற்றி இறக்க முடியாத வகையில் Door Winder channel துருப்பிடித்து, உடைந்திருந்ததால், அவசர அவசியம் கருதி, M/S.Ganesh Motor Work, Vadasery,Nagercoil நிறுவனம் மூலம் சரி செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.700/- திரு.ராஜகுமார், ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 5030/2010/இ1

**தீர்மானம் எண். 301 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரியும் திரு.S.ஏசுதாஸ் பணியில் சேர்ந்து 23/4/22-ல் 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதால் அரசாணை எண்:390 நாள்:7/4/2012-ல் தெரிவித்துள்ளபடி அன்னாருக்கு ஊக்கத்தொகை ரூ.2000/- மற்றும் சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்:471/2018/எச்1

**தீர்மானம் எண். 302 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 5**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார்கள் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில், குடிநீர் ஏற்றப்பட்டு பீளிச்சிங்பவுடர் கலக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு விநியோகம் செய்யப்பட்டும் குடிநீரில் தகுந்த அளவு பிளிச்சீங் பவுடர் கலக்கப்பட்டு உள்ளதா என்பதை கண்டறிய கூடுதலாக 10 எண்ணம் Chloroscope test Kite-கள் வாங்கிய வகையில் கீழ்காணும் செலவினம் செய்யப்பட்டது.

| **பட்டியல் எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **செலவின விவரம்** | **தொகை(ரூ)** |
|---|---|---|---|
| Co 1000098 | Sujha Surgicals, 37/1-23-9 Bellmark complex,Nagercoil. | Chloroscope sing 10 Nos. | 13000/- |
| | | **Total** | **13000/-** |

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி செய்யப்பட்ட செலவினம் ரூ.13000/- ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: E2/547/2021

**தீர்மானம் எண். 303 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 6**

இந்நகராட்சிக்கு பொறியியல் பிரிவில் புதிய திட்டப்பணிகளுக்கான கருத்துருக்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் போது,அது தொடர்பான வரைபடம் (ம) ஆவணங்களை Colour Xerox எடுக்கும் வசதி நகராட்சியில் இல்லாத காரணத்தால், அதிக அளவில் செலவினம் ஏற்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருக்களை அளவீடு செய்வதற்கு Running Tape இல்லாத காரணத்தால், அளவீடு செய்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. இவைகளை தவிர்க்கும் பொருட்டு, அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Colour Printer மற்றும் Running Tape வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/- க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 856/2022/இ1

**தீர்மானம் எண். 304 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 7**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடைசி பாலம் முதல் கடற்கரை சந்திப்பு (Beach Junction) வரை உள்ள மாநில நெடுஞ்சாலையில் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்பட்டு, உயிர் பலிகள் அதிகரித்து வருவதால், அதை தவிர்க்கும் பொருட்டு, பொது மக்கள் நலன் கருதி, வேகத்தடைகள் அமைக்க பொது மக்கள் மற்றும் போக்குவரத்து காவல் துறையினரால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே கொட்டில்பாடு கடைசி பாலம் முதல் கடற்கரை சந்திப்பு வரை உள்ள மாநில நெடுஞ்சாலையில் இணையும் சிறு பாலங்கள் மற்றும் குறுக்கு சாலைகளின் இருபகுதியிலும் வேகத்தடைகள் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.851/2022/இ1

**தீர்மானம் எண். 305 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 8**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக 01.07.2022 ஆம் தேதிய தொலைபேசி செய்தியில், தமிழக அரசின் ஓர் ஆண்டு சாதனையாக இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் வெளியிட தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், இந்நகராட்சியில், 2021-2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினகரன் நாளிதழின் 05.07.2022 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.63,240/- ஐ வழங்க கேட்டு, M/s.KAL Publication (P) Ltd., Nagercoil நிறுவனத்திலிருந்து பட்டியல் எண்.3300360101 நாள்: 05.07.2022 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2045/2018/இ1

**தீர்மானம் எண். 306 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 9**

சட்டப்பேரவை விதி 110-ன் கீழ்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 19.03.2020-ஆம் தேதிய அறிக்கையின் படி, இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதியில், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் ஆகியவற்றை நகராட்சி பொது நிதியின் கீழ் அமைப்பதற்கு மன்றத்தீர்மானம்எண்:2424நாள்:30/11/2020-ன்படிமன்றஒப்புதல் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Construction of Yoga centre @ Sasthankarai in Ward No:23 (Sy.No: P2-3/10) | 9,80,000/- |
| 2 | Construction ofGym shed with equipments @ BoundaryRoad near carmelJyothi school in ward:1 ( SY.NO:A1-3/10) | 9,80,000/- |

.

தற்போது மேற்காணும் பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் நிலையில் உள்ளது. மேலும் மேற்படி பணிகள் நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், YOGA மற்றும் GYM-ஐ முறையாக பயன்படுத்தி, பராமரிக்கவும், நகராட்சிக்கு வருவாயை ஈட்டுவதற்கு ஏதுவாகவும், குத்தகைக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1337-1/2020/இ1

**தீர்மானம் எண். 307 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 10**

இந்நகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 'தமிழ் வாழ்க' என்ற வாசகம் அடங்கிய Neon Letter Board எரியாமல் உள்ளதால், அதனை Neon Board Service நிறுவனத்தின் தொழில்நுட்ப பணியாளர் மூலம் பரிசேதனை செய்யப்பட்டதில்,Neon Letter 3 எண்ணம், சரி செய்தல்,Transformer மாற்றம் செய்தல் Board full service செய்தல் மற்றும் Wiring, Painting பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு, 15/7/2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | S.Herbert Durai singh, NO.17/56-2,Vaathikonam, Arumanai & (p.o) | 29,600/- |
| 2 | Imayam stamp & Metal works, Opp. Divines Hotal, TLJ Complex, II nd Floor, Market Road, Marthandam. | 32,300/- |
| 3 | Justin Enterprises, 5/136-1/5/31, Theruvethivilai, Ambalakadai, Chitharal (p.o) | 30,900/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.Herbert Durai Singh,Arumanai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுப் பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கோள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 802-2/2022/இ1

**தீர்மானம் எண். 308 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 11**

இந்நகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள “குளச்சல் நகராட்சி அலுவலகம்” என்ற வாசகம் பதித்துள்ள Entrance Arch Board எரியாமல் உள்ளதால், LED Board அமைத்தல் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் தொழில்நுட்ப பணியாளர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டதில், Entrance Arch Board மாற்றி புதிய LED Board அமைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள Entrance Arch Board மாற்றி புதிய LED Board அமைக்க 15.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | S.Herbert Durai singh, NO.17/56-2,Vaathikonam, Arummanai & (p.o) | 35,400/- |
| 2 | Justin Enterprises, 5/136-1/5/31, Theruvethivilai, Ambalakadai, Chitharal (p.o) | 37,500/- |
| 3 | Imayam stamp & Metal works, Opp. Divines Hotal, TLJ Complex, II nd Floor, Market Road, Marthandam | 39,100/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.Herbert Durai Singh, Arumanai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுப் பணி உத்தரவு வழங்கவும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கோள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 802-1/2022/இ1

**தீர்மானம் எண். 309 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 12**

கன்னியாகுமரி மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:வ3/36384/2021 நாள்:04.07.2022-ல், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தேடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் மீதான புகார் குறித்த புகார் மனுக்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் அனுப்ப வேண்டிய முகவரி குறித்த அறிவிப்பு பலகையை, நகராட்சி அலுவலகத்தில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பொருள் தொடர்பான பலகையை நகராட்சியில் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு, 18.07.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதீப்பீட்டுத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Justin Enterprises,<br>5/136-1/5/31, Theruvethivilai,<br>Ambalakadai, Chitharal (p.o) | 16,250/- |
| 2 | Imayam stamp & Metal works,<br>Opp. Divines Hotal, TLJ Complex,<br>IIndFloor, MarketRoad, Marthandam | 17,400/- |
| 3 | S.Herbert Durai singh,<br>NO.17/56-2,Vaathikonam,<br>Arummanai & (p.o) | 14,950/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், S.HerbertDurai Singh,Arumanai என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுப் பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கோள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டபப்டுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 808/2022/இ1

**தீர்மானம் எண். 310 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தில் (MCC) உள்ள உரத் தொட்டிகள், பிளாஸ்டிக் சேகரிக்கும் அறை ஆகியவற்றில் வர்ணம் பூசுதல், Plastic shredding Machine பழுதடைந்துள்ளதை சரி செய்தல், உரக்கிடங்கில் பராமரிக்கப்படும் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு தேவையான ¾ (“Hose“) வாங்குதல் மற்றும் உரம் தயாரிக்கும் கூடத்தில் தினந்தோறும் சேகரிக்கப்படும் உரத்தின் அளவுகளை குறிப்பிடுவதற்கு Hylem Sheet- லான Board (8X4Size) அமைத்தல் ஆகிய பணிகளை ரூ.17000/-ம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும்,மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 863/2022/இ1

**தீர்மானம் எண். 311 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22-ல் பள்ளிரோடு பகுதியில் அமைந்துள்ள கதவு எண்.22-7/1, வரிவிதிப்பு எண்.148/022/00002 திரு.முகம்மது அப்துல் கபூர் என்பவருக்கு சொந்தமான வணிக பயன்பாடு கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை வரி அரையாண்டிற்கு ரூ.1800/- ஆக உள்ளது. மேற்படி கடைக்கு திடக்கழிவு மேலாண்மை வரி கூடுதலாக உள்ளதால், அரையாண்டு வரி ரூ.600/- ஆக நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 422/2020/எச்1

**தீர்மானம் எண். 312 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண்: 15

இந்நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண்: **19**-ல் மாதாகாலணி குறுக்கு தெருக்களில், வடிகால் ஓடை நிறைந்து, மழைக்காலங்களில் தண்ணீர் அருகில் உள்ள குடியிருப்புக்களுக்குள் சென்று துர்நாற்றம் வீசி வருகிறது. மேற்படி வடிகால் ஓடை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதால், Vent Portion மிகவும் குறுகலாகவும், பக்கசுவர் மற்றும் மேல் மூடி உடைந்தும் காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி பகுதியில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சிமென்ட் தளம் அமைக்கும் பணியினை ரூ.5,20,000/-ம் மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 870/2022/இ1

**தீர்மானம் எண். 313 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

### 10.08.2022 ஆம் தேதிய அவசரக் கூட்டம் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட பொருள்

## பொருள் எண்.1

குளச்சல் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோ மெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையாள அட்டை (ID Card) தயாரித்து வழங்குதல், விற்பனை திட்டம் மற்றும் MIS தகவல்களை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் பணிக்கு 15.07.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

1. M/s.Mirifical Careers Pvt.Ltd.,
   100: 12A IInd Floor,
   K.K.Building, T.Nagar,
   Ramanathapuram
   Coimbatore - 641045.

2. M/s.Bharathi HR Consultancy,
   3/36, First Avenue,
   Rangasamy Naidu Street,
   Kuniyamuthur, Coimbatore.

மேற்படி வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப உறையை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s.Mirifical Careers Pvt.Ltd., Coimbatore நிறுவனம் தொழில் நுட்ப தகுதி உடையது. அதன்படி, விலைப்புள்ளி உறை 20.07.2022 அன்று திறக்கப்பட்டது. அதில் Survey of Street vendor ஒரு எண்ணத்திற்கு ரூ.700/- என ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டது. மேற்படி விலையை குறைத்து கொடுக்க கடிதம் அனுப்பப்பட்டதன் படி, மேற்படி நிறுவனத்தார் 1 எண்ணத்திற்கு ரூ.650/- வீதம் 230 எண்ணத்திற்கு ரூ.149500/- க்கு பணி மேற்கொள்ள Negotiation வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணிக்கு M/s.Mirifical Careers Pvt.Ltd., Coimbatore நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.426/2020/TPI

**தீர்மானம் எண். 314 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## <u>30.08.2022 ஆம் தேதிய அவசரக் கூட்டம் நடத்தப்படாமல் ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள்</u>

### பொருள் எண் : 1

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.8880/2022/பி2 நாள் 22.04.2022-ன் படி, இந்நகராட்சியில், நமக்கு நாமே திட்டம் : 2022-2-ன் கீழ், களிமார் முதல் வாய்க்கால் தெரு செல்லும் சாலையில் பாம்பூரி வாய்க்கால் அருகே களிமார் ஓடையில் பக்கச்சுவர் கட்டும் பணியினை, ரூ.12.15 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு நிதி ரூ.8.10 + பொது மக்கள் பங்களிப்பு ரூ.4.05 இலட்சம்) மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்காணும் பணிக்கு பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.4.05 இலட்சம் திருமதி.எல்.ஜெய ஆனந்தவல்லி என்பவரால் SBI வங்கி, குளச்சல் கிளையின் வங்கி கேட்பு வரைவோலை எண்.468124 நாள் 29.06.2022-ன் படி செலுத்தப்பட்டது. மேலும் மேற்காணும் பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1845/2021/இ1

**தீர்மானம் எண். 315 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 2

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20-ல் துறைமுகத்தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடையை சரி செய்யவும் உடைந்துள்ள பேவர் பிளாக் சாலை, சிமெண்ட் சாலைகளை சரி செய்யவும் நகர்மன்ற தீர்மானம் எண்.107 நாள் 01.06.2022-ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.2,20,000/-க்கு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி 24.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.004% குறைவு |
| 2 | திரு.A.பிரான்சிஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.88% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.004% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கும் மேற்படி பணியினை பொது நிதியில் மேற்கொள்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.573/2022/இ1

**தீர்மானம் எண். 316 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 3

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகதெருக்கள், மரமடி மற்றும் மாதா காலனி ஆகிய குறுகலான தெருக்களில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்து அதன் மேல் மூடுசிலாப் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குறுகலான தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள மூடுசிலாப் ஆங்காங்கே உடைந்து பொது மக்கள் நடந்து செல்வதற்கு சிரமமாக உள்ளது. மூடுசிலாப் மற்றும் வடிகால் ஓடையின் பக்கச்சுவர் உடைந்து கழிவு நீர் குடியிருப்பு பகுதிளுக்குள் சென்று விடுகிறது. அதனால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய் பரவும் நிலையில் உள்ளது. எனவே துறைமுகதெருக்கள், மரமடி மற்றும் மாதாகாலனி போன்ற கடலோர தெருக்களில் உடைந்துள்ள வடிகால் ஓடை, சிலாப், பேவர் பிளாக் மற்றும் சிமெண்ட் சாலைகளை சரி செய்வதற்கு மதிப்பீடு ரூ.3,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.976/2022/இ1

**தீர்மானம் எண். 317 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 4

இந்நகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள Syron பழுதடைந்து ஒலிக்க இயலாமல் உள்ளது. அதன் மோட்டார் பழுதை சரிசெய்வதற்கும் புதியதாக Cable மற்றும் Panel Board அமைக்கவும் Syron pillar வர்ணம் பூசுவதற்கும் மதிப்பீடு ரூ.35000/- தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.983/2022/இ1

**தீர்மானம் எண். 318 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 5

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் பழுதடைந்துள்ள பேவர்பிளாக் சாலை, சிமெண்ட் காங்கிரீட் சாலை, வடிகால் ஓடை மற்றும் வடிகால் ஓடை மூடுசிலாப் (வருடாந்திர பராமரிப்பு பணி) சரி செய்தல் பணியை ரூ.9,80,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கிழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.148 நாள் 29.07.2022-ன் மூலம் ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.A.விஷ்ணுராம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2 | திருC.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.52 அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04% குறைத்து கொடுத்துள்ள திரு.A.விஷ்ணுராம், ஒப்பந்த புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.686/2022/இ1

**தீர்மானம் எண். 319 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 6

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தை ரூ.7.00 கோடி மதிப்பிட்டில் புதிதாக கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் மேற்படி பணிக்கு திட்ட ஆலோசகர் (Consultant) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் மொத்த மதிப்பீட்டு தொகையில் 1% திட்ட ஆலோசகருக்கு வழங்க குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்டதன்படி,

மேற்படி பணிக்கு திட்ட ஆலோசகர் நியமனம் செய்வதற்கு மதிப்பீடு தொகை ரூ.7,00,000/-க்கு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி 02.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Ayothi Consultancy<br>112, Nadar Commercial Complex<br>Kamarajar Nagar, Rajapalayam. | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | M/s.Sama Construction & Developments,<br>22/68, Venkatesan street,<br>Tambaram, Chennai | மதிப்பீட்டை விட 15% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Ayothi Consultancy, Rajapalayam நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கும், மேற்படி தொகையினை பொது நிதியில் மேற்கொள்வதற்கும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.498/2022/இ1

**தீர்மானம் எண். 320 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 7

இந்நகராட்சிக்கு சொந்தமான கண்காணிப்பு வாகனம் (ஈப்பு) எண்.TN 75 K 6526 -க்கான வாகன காப்பீடு 23.08.2022 -ல் முடிவடைவதால் அடுத்து வரும் ஓராண்டிற்கு காப்பீட்டை புதுப்பிப்பதற்காக 'The New India Assurance Co Ltd'., Karungal நிறுவனத்திடமிருந்து ரூ.10,880/- க்கான கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து 'The New India Assurance Co Ltd'., Karungal நிறுவனத்திற்கு செலுத்தி காப்பீடை புதுப்பித்து கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண். 321 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 8

இந்நகராட்சி அலுவலகத்தில் தெருவிளக்கு பிரிவு பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டு வரும் அறையின் சுவர்கள், கதவுகள், ஜன்னல்கள் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது, அதனை சரி செய்வதற்கும், நகரமைப்பு பிரிவில், Wiring, Net connection புதியதாக மேற்கொள்ளவும், கணணி அறையில் சேதமடைந்துள்ள ஜன்னல்களை சரிசெய்யவும், தினசரி வசூல் செய்யும் தொகையை பாதுகாப்பாக வைப்பதற்கு Locker வாங்குவதற்கும், Liquid Chlorination அறையில் மேல்கூரை

அமைப்பதற்கும், மதிப்பீடு ரூ.3,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.982/2022/இ1

**தீர்மானம் எண். 322 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 9

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக (Primary Collection) பயன்படுத்தப்பட்டு வரும் Battery Operated vehicle No.2,5,6 பழுதடைந்துள்ளதால், பழுதை சரி செய்வதற்கு கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.ONYX Green Tech,<br>Aurmanai,<br>Kanyakumari District | Rs.6,000/- |
| 2 | M/s.Galary Systems,<br>W Marret St,<br>Madurai Main Road, Madurai | Rs.6,900/- |
| 3 | M/s.We look Enterprises,<br>47, Maruthamalai,<br>Ramasamy Gounder Layout,<br>Coimbatore. | Rs.7,500/- |

மேற்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.ONYX Green Tech, Aurmanai, நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளும் பொருட்டு, பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை நகர்மன்றத் தீர்மானம் எண்.2689 நாள் 21.01.2022-ன் படி, ஒப்புதல் பெறப்பட்டுள்ள தொகை ரூ.5,00,000/- லிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.601/2022/எச்1

**தீர்மானம் எண். 323 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 10

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக (Primary Collection) பயன்படுத்தப்பட்டு வரும் Battery Operated vehicle No.7,12 பழுதடைந்துள்ளதால், பழுதை சரி செய்வதற்கு கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.ONYX Green Tech,<br>Aurmanai,<br>Kanyakumari District | Rs.5,450/- |
| 2 | M/s.Galary Systems,<br>W Marret St,<br>Madurai Main Road, Madurai | Rs.6,250/- |
| 3 | M/s.We look Enterprises,<br>47, Maruthamalai,<br>Ramasamy Gounder Layout,<br>Coimbatore. | Rs.6,750/- |

மேற்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.ONYX Green Tech, Aurmanai, நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளும் பொருட்டு, பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை நகர்மன்றத் தீர்மானம் எண்.2689 நாள் 21.01.2022-ன் படி, ஒப்புதல் பெறப்பட்டுள்ள தொகை ரூ.5,00,000/- லிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.601/2022/எச்1

**தீர்மானம் எண். 324 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 11

இந்நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்காக புதிய ஈப்பு வாகனம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வாங்குவதற்கு மன்றத் தீர்மானம் எண்.88 நாள் 01.06.2022-ன் படி, ரூ.8,27,742/-க்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பின்னர், Mahindra & Mahindra, Chennai நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியலின்படி, ரூ.9,18,373/- (GST உட்பட) தொகை செலுத்தப்பட்டு புதிய ஈப்பு வாகனம் நகராட்சிக்கு வாங்கப்பட்டது. மேற்படி ஈப்பு வாகனத்தை பதிவு செய்தல், காப்பீடு பெறுதல் ஆகிய தொடர்பான இதர செலவினங்களுக்கு ரூ.2,40,000/- இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** :

1. நகர்மன்றத் தீர்மானம் எண்.88 நாள் 01.06.2022-ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்ட தொகை ரூ.8,27,742/-லிருந்து கூடுதலாக செலவு செய்யப்பட்ட தொகை ரூ.90,631/-க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வாகன காப்பீடு, வாகன பதிவு செய்தல் தொடர்பான இதர செலவினங்களை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.370/2022/இ1

**தீர்மானம் எண். 325 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 12

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22-ல் துறைமுகத்தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடையை சரி செய்யவும், உடைந்துள்ள சிமெண்ட் சாலைகளை சரி செய்யவும் நகர்மன்ற தீர்மானம் எண்.107 நாள் 01.06.2022-ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.2,60,000/- தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி 24.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.A.பிரான்சிஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.77% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கும், மேற்படி தொகையினை பொது நிதியில் மேற்கொள்வதற்கும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.573-1/2022/இ1

**தீர்மானம் எண். 326 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 13

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.G2/22839/2022 நாள் 12.08.2022 -ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, இந்திய ராணுவ ஆட்சேர்ப்பு முகாம் நடத்துவதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்கும், அதற்கான நகராட்சி நிதி பங்களிப்பு தொகை ரூ.2,00,000/- செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.980/2022/சி1

**தீர்மானம் எண். 327 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 14

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.G2/37838/2021 நாள் 10.08.2022 -ன் படி, (சுதந்திர தின அமுத பெருவிழா) அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றும் திட்டத்திற்கு இந்நகராட்சிக்கு 6,000 தேசிய கொடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்காக தொகை ஒரு தேசிய கொடிக்கு ரூ.21/- வீதம் 6000

கொடிக்கு ரூ.1,26,000/- கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, வரப்பெற்ற தேசிய கொடியில் ரூ.57,345/- க்கு விற்பனை செய்தது போக மீதமுள்ள தொகை ரூ.68655/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.981/2022/எச்1

**தீர்மானம் எண். 328 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## 29.09.2022 ஆம் தேதிய சாதாரண கூட்டம் நடத்தப்படாமல் ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள்

### பொருள் எண் : 1

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தொற்று காரணமாக அவசர அவசியம் கருதி, தடுப்பூசி முகாம் நடைபெறுவதற்கு பேனர்கள் மற்றும் நோட்டீஸ் அச்சடித்த வகையில் ரூ.4350/- வழங்க கேட்டு ஃப்ரண்ட்ஸ் டிஜிட்டல் பேனர், குளச்சல் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.577/2021/எச்1

**தீர்மானம் எண். 329 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

### பொருள் எண் : 2

மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள் 25.08.2022-ன் படி, குளச்சல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள வினாயகர் சிலைகளை வினாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 04.09.2022 அன்று வெட்டுமடை அருகே கடலில் கரைப்பதற்கு மண்ணால் நடைபாதை அமைப்பதற்கும், சவுக்கு கம்பால் பக்கச்சுவர் (Temporary Hand rail) மற்றும் Lighting arrangement, Genset வாடகை அடிப்படையில் அமைப்பதற்கும், சிலைகளை கரைத்த பின் மண்ணை அப்புறப்படுத்துவதற்கும் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன்<br>ஒப்பந்ததாரர் | ரூ.47,400/- |
| 2 | திரு.A.பிரான்சீஸ்<br>ஒப்பந்ததாரர் | ரூ.48,000/- |
| 3 | திரு.C.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | ரூ.50,000/- |

மேற்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.இரவீந்திரன் மூலம் பணி மேற்கொள்ளும் பொருட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, பணி உத்தரவு வழங்கி, பணி செய்து முடிக்கப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.47,400/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1002/2022/இ1

**தீர்மானம் எண். 330 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 3

இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-23-ன் கீழ், ரூ.12,15,000/- மதிப்பீட்டில் களிமார் முதல் வாய்க்கால் தெரு செல்லும் சாலையில் பாம்பூரி வாய்க்கால் அருகே களிமார் ஓடையில் தடுப்பு சுவர் கட்டும் பணி செய்தல் பணிக்கு 24.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.A.பிரான்சீஸ் ஒப்பந்ததாரர் | 1.34% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.இரவீந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.602/2022/இ1

**தீர்மானம் எண். 331 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 4

இந்நகராட்சி அலுவலகத்தில் அனைத்து கட்டிடத்திலும் Wiring work பழுதடைந்துள்ளது. தற்போது அதிகளவு Load கள் பழைய Wiring-ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் Wiring பழுதாகி அடிக்கடி மின்கசிவு ஏற்படுவதால் தீ விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே Wiring முழுவதும் புதியதாக அமைக்கவும் ஆணையர் அறையில் பழுதான தரையை மாற்றியமைக்கவும், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறையில் புதியதாக False ceiling பணி மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ.9,80,000/- தயார் செய்யப்பட்டுள்ளது மேற்படி தொகை ரூ.9,80,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1061/2022/இ1

**தீர்மானம் எண். 332 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிக்குட்பட்ட மதனாவிளை பகுதியில் புதுத்தெருவிலிருந்து வினியோக குழாய் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. மதனாவிளை மேட்டுப்பகுதியாக இருப்பதால், குடிநீர் சரிவர செல்லவில்லை. இதனால் பொது மக்களிடமிருந்து பல புகார்கள் வரப்பெற்றுள்ளது. எனவே குளச்சல் - திங்கள் நகர் மெயின் ரோட்டில் செல்லும் வினியோக குழாயிலிருந்து மதனாவிளை பகுதிக்கு புதியதாக 63mm PVC pipe அமைத்து சீரான குடிநீர் வழங்க மதிப்பீடு ரூ.90,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1062/2022/இ1

**தீர்மானம் எண். 333 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**\

**பொருள் எண் : 6**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலுள்ள சுமார் 7070 வீடுகள், 1092 வணிக நிறுவனங்கள் மற்றும் 94 அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்து சுமார் 7.5 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகுகின்றன. இவற்றை திடக்கழிவு மேலாண்மை விதிப்படி தரம் பிரித்து வாங்கும் முதன்மை சேகரிப்பு பணிக்கு இந்நகராட்சியில் 24 தள்ளுவண்டிகள், 7 பேட்டரி வாகனம் (BOV) மற்றும் 2 இலகுரக வாகனம் 1 டிப்பர் லாரி ஆகியவை பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் தற்போது பயன்பாட்டிலுள்ள 7 எண்ணம் BOV அடிக்கடி பழுதாகுவதால் குப்பைகளை தரம் பிரித்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை சரிவர செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே இந்நகராட்சி முதன்மை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் 7 எண்ணம் BOV இல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு வருடாந்திர பராமரிப்பு பணி (Labour and Materials) மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3,50,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1060/2022/எச்1

**தீர்மானம் எண். 334 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண் : 7**

இந்நகராட்சிக்குட்பட்ட உப்பளம் பகுதி உரக்கிடங்கு நிலம் தொடர்பான வழக்கு எண்.WP(MD) - 15172/2017 மற்றும் (MD)No.178/2019 வழக்கு சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை 16.09.2022 அன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு வழக்கு நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக வழக்கறிஞர் திரு.D.சசிகுமார் அவர்களுக்கு கட்டண தொகை ரூ.9500/- வழங்க கேட்பு வரப்பட்டுள்ளது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.135/2017/இ1

**தீர்மானம் எண். 335 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 8

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் 16-282/2 களிமார், மெயின் ரோட்டில் மரியா ஸ்டீல் மற்றும் அதிபன் ஸ்டீல் ஏஜென்சீஸ் பெயரில் சிமெண்ட் விற்பனை நிலையம் மூலமாக தூசி பரவுவதாக தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.18141-2013 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 08.08.2022 அன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு வாதாடிய வழக்கறிஞர் திரு.B.சரவணன் அவர்களுக்கு கட்டணம் ரூ.9500/- கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3433/2013/எச்1

**தீர்மானம் எண். 336 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 9

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 N 3530-ல் ஸ்பீடா மீட்டர் கேபிள் பழுது ஏற்பட்டு மீட்டர் இயங்கவில்லை. எனவே மேற்படி வாகனத்தை S.S Automobiles, Tirunelveli மற்றும் Rajan Motor Works. Colachel நிறுவனம் மூலம் சரிசெய்த வகையில் ரூ.875/- திரு.வ.ராஜ குமார், ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 N 3530-ல் Horn பழுதடைந்து சரியாக செயல்படாமல் இருந்தது. எனவே ஒரு புதியதாக ஒரு செட் Horn வாங்கிய வகையில் அவசர அவசியம் கருதி Lilly Asir Auto stores, Karungal நிறுவனம் மூலம் சரி செய்த வகையில் அதற்கான செலவினம் ரூ.2330/- திரு.சி.சுந்தர் ராஜ் ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண். 337 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 10

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.31, (வரிவிதிப்பு எண்.148/2018031) திருமதி.ஜெயசோபன பாய் என்பவர் கடையினை வாடகைக்கு எடுத்து நடத்தி வந்தார். அவர் தனது 29.08.2022 தேதிய மனுவில் தனக்கு மேற்படி கடையினை நடத்த இயலாத காரணத்தால் நகராட்சி வசம் கடையின் சாவியினை ஒப்படைத்துள்ளார். மேலும் அன்னார் செலுத்திய வைப்பு தொகையிலிருந்து மாத வாடகை நிலுகை தொகை போக மீதி தொகையையும் வழங்க கேட்டுள்ளார்.

மேலும் காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.18 (வரிவிதிப்பு எண்.திரு.பத்மகுமார் என்பவர் தனது 02.09.2022 தேதிய மனுவில் மேற்படி கடையினை நடத்த இயலாத காரணத்தால் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். மேலும் அன்னாரது மனுவில் நிலுவை வாடகை தொகை போக ஏற்கனவே செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார்.

எனவே மேற்படி இரு கடைகளின் ஏலம் உரிமம் ரத்து செய்தும், மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதுடன் கடைகளை ஒப்படைத்த தேதியிலிருந்து கணணியில் கேட்பு நீக்கம் செய்யவும், மேற்படி வைப்புத் தொகை திரும்ப வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண். 338 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 11

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை செயல்முறைகள் ந.க.எண் K.Dis No.30726/P3/2017 நாள் 10.01.2018-ன் படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) 45 தினக்கூலி பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 45 தினக்கூலி பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு M/s.Puliyoorsalai Labour contract Co-operative society Ltd., நிறுவனத்திற்கு 01.11.2021-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் 30.04.2022-ல் முடிவடையும் நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.21287/2021/EA2-ன் படி, வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்களை பணியமர்த்துதல் தொடர்பாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோலின் அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி கோரி 13.10.2021-ல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி முதன்மை அனுமதி பெறப்படும் வரையில், M/s.Puliyoorsalai Labour contract Co-operative society Ltd., நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ள விலை நிரக்கில் 45 பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினம் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் மேற்படி நிறுவனத்தின் உடனான ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.809/2020/எச்1

**தீர்மானம் எண். 339 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 12

இந்நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண்.68, நாள் 01.06.2022-ன் படி, 20 DBC பணியாளர்கள் 31.03.2023 வரை பணிபுரிந்திட

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் தற்போது எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலம் என்பதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கூடுதலாக 7 நபர்கள் பணியில் அமர்த்திடவும், அதற்கான செலவுத் தொகை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் கூடுதல் பணியாளர்களுக்கான தினக்கூலி தொகை கீழ்க்கண்ட விபரப்படி செய்யப்படுகிறது.

1. DBC பணியாளர்கள் எண்ணிக்கை - 7
2. தினக்கூலி ஊதியம் ஒரு நாளைக்கு (பகுதி நேரம்) - ரூ.250/-
3. 2022-23 ஆம் ஆண்டிற்கு 7 X 182 X 250 = ரூ. 3,18,500/-
4. EPF நகராட்சி பங்குத்தொகை ரூ.38220/-

மேற்படி மதிப்பீடு தொகை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.2571/2017/J1 நாள் 23.04.2018-ன் படியும், மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையிலும் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1182/2014/எச்1

**தீர்மானம் எண். 340 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண் : 13

இந்நகராட்சிக்குட்பட்ட உப்பளம் உரக்கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை JCB இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தி சமன்படுத்துவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.2689 நாள் 21.01.2022 -ன் படி, விலைப்புள்ளி கோரப்பட்டதை கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | உரிமையாளரின் பெயர் | தொகை (ரூ.1 மணி நேரத்திற்கு (ஜி.எஸ்.டி உட்பட) |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ரமேஷ் குமார்,<br>சாஸ்தான்கரை, குளச்சல் | 810/- |
| 2 | திரு.சி.முருகன்,<br>கொம்பன்விளாகம், குளச்சல். | 830/- |
| 3 | திரு.ஆர்.பாபு<br>வெள்ளியாகுளம், குளச்சல் | 870/. |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண். 2 மற்றும் 3-ஐ விட வ.எண்.1 திரு.எஸ்.ரமேஷ் குமார் என்பவர் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மேற்படி குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.ரமேஷ் குமார் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண். 341 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## 09.11.2022 ஆம் தேதிய அவசரக்கூட்டப் பொருள்கள்

## பொருள் எண்.1

தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள் 24.06.2022–ல் பகுதி III பிரிவு 1 (a) –ல் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022–ன் படி, வார்டு குழு (Ward committee) மற்றும் பகுதி குழு (Area Sabha) உருவாக்குவதற்கும் மற்றும் செயல்படுத்துவதற்கும் விதிகள் குறித்த ஆணை வெளியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையில், வார்டு குழுக்கள் அமைக்கவும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி குழு) விதிகள் 2022–ல் விதி 8–ல் நான்கு பகுதி குழுவாக பிரித்து ஒவ்வொரு பகுதி குழுவிற்கும் ஒரு பிரதிநிதியை நியமிக்கவும் மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சியில் 24 வார்டுகளுக்கும் 96 பகுதி குழுக்களுக்கு கீழ்கணும் விபரப்படி உறுப்பினர்கள் நியமனம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டு எண் | குழு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 1–1 | அமுதா |
| | 1–2 | ஸ்டாலின் பிரபு |
| | 1–3 | அர்ஜுனன் |
| | 1–4 | மீனா |
| 2 | 2–1 | முருகேசன் |
| | 2–2 | தனேஷ் குமார் |
| | 2–3 | அர்ஜுனன் |
| | 2–4 | முருகதாஸ் |
| 3 | 3–1 | சுனில் ஜெயகுமார் |
| | 3–2 | ஜாண் ஜெபமணி |
| | 3–3 | ராதா கிருஷ்ணன் |
| | 3–4 | பைஜு |
| 4 | 4–1 | ராஜன் |
| | 4–2 | சரவணன் தணிகேஷ் |
| | 4–3 | மகேஷ் |
| | 4–4 | கண்ணன் |

| | | |
|---|---|---|
| 5 | 5–1 | மரிய தாசன் |
| | 5–2 | நீல பெருமாள் |
| | 5–3 | சுபா சந்தியா |
| | 5–4 | அம்பிகா |
| 6 | 6–1 | கலீல் ரகுமான் |
| | 6–2 | சதீஷ் பாரதி |
| | 6–3 | சையது அலி |
| | 6–4 | மஞ்சு |
| 7 | 7–1 | சகாதேவன் |
| | 7–2 | ஜெகதீஷ்வரன் |
| | 7–3 | சசிகரன் |
| | 7–4 | கிரண் தேவ் |
| 8 | 8–1 | பிரடி ஜாண் |
| | 8–2 | சுதாகர் |
| | 8–3 | ஹரிச்சந்திரன் |
| | 8–4 | சிபின் பிரபாகர் |
| 9 | 9–1 | ஜாண் ஷாலி |
| | 9–2 | கிறிஸ்து ராஜ் |
| | 9–3 | மரிய செல்வி |
| | 9–4 | ஜெயகுமார் |
| 10 | 10–1 | சுதாகரன் |
| | 10–2 | சுரேஷ் |
| | 10–3 | டேவிட் |
| | 10–4 | ஜெகன் மோகனன் |
| 11 | 11–1 | நாகூர்கண் |
| | 11–2 | முகம்மது ஷாபி |
| | 11–3 | மாலுக் முகம்மது |
| | 11–4 | சுபேர் |
| 12 | 12–1 | சிபின் ராஜ் |
| | 12–2 | கலீல் ரகுமான் |
| | 12–3 | விஜயராணி |
| | 12–4 | அப்துல் காதர் |
| 13 | 13–1 | மணி |
| | 13–2 | மரிய வின்சன்ட் |
| | 13–3 | சரோஜா |
| | 13–4 | விஜய சிங் |

| | | |
|---|---|---|
| 14 | 14–1 | லவ்லி நிஷா |
| | 14–2 | சகாய பென்சி |
| | 14–3 | மேரி ஐஷா |
| | 14–4 | ஜெய மேரி |
| 15 | 15–1 | தமிழ் செல்வி |
| | 15–2 | அயரின் |
| | 15–3 | முகம்மது சபீர் |
| | 15–4 | பைரஸ் காஜா |
| 16 | 16–1 | தினேஷ் |
| | 16–2 | சந்திர மோகன் |
| | 16–3 | பிரபு |
| | 16–4 | நாகராஜ் |
| 17 | 17–1 | ாநசர் |
| | 17–2 | அபுதாகிர் |
| | 17–3 | அஸ்ரப் |
| | 17–4 | அப்துல் காதர் |
| 18 | 18–1 | அல் அமீன் |
| | 18–2 | நூர் ஜகான் |
| | 18–3 | முகம்மது ஷாபி |
| | 18–4 | ரிபாய் கான் |
| 19 | 19–1 | மரிய ரூபன் |
| | 19–2 | ஆன்றோ பிலிப் |
| | 19–3 | ஜாண்சன் கில்பின் |
| | 19–4 | ஆன்றணி டிக்ரோஜ் |
| 20 | 20–1 | அருள் அகிலன் |
| | 20–2 | எம்லட் ராணி |
| | 20–3 | அமல பபிதா |
| | 20–4 | சகாய வினா |
| 21 | 21–1 | சகாய மேரி |
| | 21–2 | ஷோபா |
| | 21–3 | றைமண்ட் |
| | 21–4 | கில்டா |
| 22 | 22–1 | சகாய கெஜின் |
| | 22–2 | நிர்மலா செவ்ன் |
| | 22–3 | கில்பெர் |
| | 22–4 | தர்மராஜ் |

| | | |
|---|---|---|
| 23 | 23–1 | பிரான்சிஸ் |
| | 23–2 | கனி புஷ்பம் |
| | 23–3 | சகாய உதயன் பாபு |
| | 23–4 | பெனடிக்ட் ராஜேஷ் |
| 24 | 24–1 | மேரி விஜயா |
| | 24–2 | மேரி சைரேஷ் |
| | 24–3 | ரீனா |
| | 24–4 | செல்வராஜ் |

**அ.கு** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.**1142/2022**/ற்றி.பி.ஐ

**தீர்மானம் எண். 342 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில், பொழிமுகம் - குருசடி அருகாமையில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறை மிகவும் பழுதடைந்துள்ளதாலும், மேற்படி கட்டிடம் கடல் அருகாமையில் இருப்பதால் கம்பிகள் எளிதில் துருபிடித்து மேற்கூரை இடிந்து விழும் நிலையில் பொது மக்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளது. ஆகையால் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மதிப்பீடு ரூ.55000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் இடித்து மாற்றினால், நகராட்சி மூலம் ஒப்பந்ததாரருக்கு இடித்து மாற்றியதற்கான பட்டியல் தொகை வழங்க வேண்டும். எனவே நகராட்சி நிதி நிலையை கருத்தில் கொண்டு, மேற்படி கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1142-1/2022/இ1

**தீர்மானம் எண். 343 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.3

இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023-ன் கீழ், ரூ.12.15 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு நிதி ரூ.8.10 + பொது மக்கள் பங்களிப்பு ரூ.4.05 இலட்சம்) களிமார் முதல் வாய்க்கால் தெரு செல்லும் சாலையில் பாம்பூரி வாய்க்கால் அருகே களிமார் ஓடையில் பக்கச்சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்வதற்காக 02.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.பிரான்சீஸ் | மதிப்பீட்டை விட 1.34% அதிகம் |
| 2. | திரு.T.ரவீந்திரன் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.ரவீந்திரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண். 602/2022/இ1

**தீர்மானம் எண். 344 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி பகுதியில் நிரவுவிளை (மார்க்கெட் பின்புறம்) நகர புல எண்.P3-38-ல் தேவசிகாமணி என்பவருக்கு 9 ¼ Cent-ல் 5 Cents மட்டுமே தேவசிகாமணி என்பவருக்கு உரிமைப்பட்டது. எனவே 4 ¼ Cents நகராட்சிக்கு உரிமைப்பட்டது மற்றும் பட்டா வழங்கியது தவறு என்றும் பொன்னுசாமி என்பவர் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.WP(MD)No.22861-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். நகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு வழக்கறிஞர் (Govt.Pleader)திரு.திலக்குமார் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/-ஐ வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1104/2022/TPI

**தீர்மானம் எண். 345 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.5

குளச்சல் நகராட்சியில் 2021-2022-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1921/2004/சி1

**தீர்மானம் எண். 346 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.6

இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ், போர் வெற்றி சின்னம் அருகில் மீனவர் ஓய்வறை அமைத்தல் பணியினை ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் (அரசு நிதி ரூ.12.74 இலட்சம் + பொது மக்கள் பங்களிப்பு ரூ.13.26 இலட்சம்) மேற்கொள்வதற்கு 07.06.2022 அன்று பங்கு தந்தை புனித காணிக்கை மாதா திருத்தலம் குளச்சல் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிர்வாகம் 30.09.2022-ல் நிர்வாக காரணங்களால் நகராட்சி மூலம் பணியை செயல்படுத்த வேண்டும் என கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, 11.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | |
|---|---|
| திரு.T.இரவீந்திரன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.78% குறைவு |
| திரு.A.பிரான்சீஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.47% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.இரவீந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.78% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி 13.10.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1921/2004/சி1

**தீர்மானம் எண். 347 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.7

இந்நகராட்சியில் நிறுவப்பட்டுள்ள 5KVA UPS-ல் Connection கொடுத்துள்ள கணணிகள் அனைத்தும் மின் தடை ஏற்படும் போது OFF ஆகிவிடுகிறது. எனவே வருடாந்திர AMC கொடுத்துள்ள Novateur Electrical & Digital Systems Private Ltd நிறுவனம் மூலம் மேற்படி UPS Checkup செய்யப்பட்டது. UPS -ல் உள்ள 3 எண்ணம் Capacitor பழுதாகி உள்ளது எனவும் அதனை உடனே புதியதாக பொருத்தவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி UPS -ல் உள்ள Battery - கள் பழுதடைந்துள்ளதால் Capacitor பழுதாகி உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் வசூல் மற்றும் அனைத்து அலுவலக பணிகளும் கணணி மூலம் நடைபெறுவதாலும் மின்தடை ஏற்படும் போது கணணிகள் OFF ஆகிவிடுவதால் பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி UPS உற்பத்தி நிறுவனமான Novateur Electrical & Digital Systems Private Ltd -லிருந்து விலைப்புள்ளி ரூ.11,328/-க்கு பெறப்பட்டுள்ளது. ஆகையால் நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.239/2021/AP

**தீர்மானம் எண். 348 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.8

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக மேற்கொள்ளும் பயணங்களுக்கான பயணப்படி தொகையினை சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு வழங்கும் பொருட்டு, 2022-2023 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்130/2010/இ1

**தீர்மானம் எண். 349 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.9

இந்நகராட்சியில் பயன்பாட்டிலுள்ள 5KVA மற்றும் 3 KVA UPS களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) முறையே 02.11.2022 மற்றும் 05.11.2022 -ல் முடிவடைவதால், மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக மேற்படி UPS களின் உற்பத்தியாளரான Novateur Electrical & Digital Systems Private Limited நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, அலுவலக பணிகளில் மேற்படி UPS களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, AMC காலத்தை தொடர்ந்து ஓராண்டுக்கு முறையே கீழ்காணும் கட்டணத்தின்படி, நீட்டிப்பு செய்வதற்கும் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தை Novateur Electrical & Digital Systems Private Limited நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. 5KVA UPS ரூ.8850/-
2. 3KVA UPS ரூ.6490/-

**மொத்தம் ரூ.15340/-**

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்**.3562/A2/2007**

**தீர்மானம் எண். 350 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

## பொருள் எண்.10

இந்நகராட்சி GST தொடர்பான வழக்கு எண்.WP(MD)No.797/2022-க்கான வழக்கினை நடத்தியதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.40,000/- திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞரால் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2524/2012/பி1

**தீர்மானம் எண். 351 ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி